**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**CC.NO- 25/2020**

**Dated :24.02.2026**

**Deposition of witness for : P.W.3**

**List of Witness LW2 Examined as PW3 (Eye Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | வயது | : | 35 |
| தந்தை பெயர் | : | பாலன் | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | கந்தர்வகோட்டை | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். வழக்கு விபத்தில் இறந்து போன ராம்குமார் என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 நாகராஜ்-ஐ எனக்கு தெரியும். கடந்த 22.05.2019 ஆம் தேதி, அ.சா.1 இன் நண்பரின் திருமணத்திற்கு பத்திரிக்கை வைப்பதற்காக நானும் அ.சா.-1ம் எனது இருசக்கர வாகனத்தில் முள்ளிக்காப்பட்டி கிராமத்திற்கு சென்றோம். நாங்கள் முள்ளிக்காப்பட்டி கிராமத்தில் உள்ள ராசுக்கோனார் என்பவர் வீட்டில் மதியம் சுமார் 02.00 மணியளவில் இருந்த போது, ராம்குமார் இருசக்கர வாகனத்தில், சதிஸ் என்பவரை பார்ப்பதற்கு வந்திருப்பதாக கூறினார். பின்னர், அங்கிருந்து கந்தர்வக்கோட்டைக்கு சென்றார். நாங்களும் அங்கிருந்து கிளம்பி அவருக்கு பின்னால் சுமார் 400 அடி தூரத்தில் வந்தோம்.

2) நாங்கள் நெப்புகை சறுக்கை அருகில், வேலாடிப்பட்டியில் இருந்து கந்தர்வக்கோட்டை செல்லும் சாலையில், கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி சென்று கொண்டிருந்தோம். எங்களுக்கு முன்பாக ராம்குமார் TN 51 X 4075 என்ற பதிவெண் கொண்ட CD100 இருசக்கர வாகனத்தில், அதே சாலையில், அதே திசையில் சாலையின் இடது புறமாக சென்று கொண்டிருந்தார். அப்போது மதியம் சுமார் 02.30 மணி இருக்கும். அப்போது, எங்களுக்கு எதிர் திசையில் வந்த TN 49 BH 9671 என்ற பதிவெண் கொண்ட Yamaha FZ என்ற இருசக்கர வாகனத்தில் ஓட்டி வந்த நபர்

அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து, ராம்குமார் மீது மோதி விட்டார். அதனால் இருவரும் கீழே வி ழுந்துவிட்டார்கள். நானும் அ.சா-1ம் ராம்குமாரை தூக்கி பார்த்த போது, அவரது தலையிலும் காதிலும் முகத்திலும் காயம் இருந்தது. விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தினை ஓட்டிவந்த நபருக்கும் காலில் காயம் இருந்தது. மேற்படி விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். அந்த நபர் தற்போது நீதிமன்றத்தில் இல்லை. அவரது பெயர் ஆனந்த் என்று தெரியும். பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலமாக கந்தர்வக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு காயம்பட்ட ராம்குமாரை சிகிச்சைக்குஅனுப்பி வைத்தோம். அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு சிகிச்சையில் இருந்த ராம்குமார் கடந்த 23.05.2019 ஆம் தேதி, சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். விபத்தை நான் நேரடியாக பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1)** அ.சா.1 நாகராஜ் எனக்கு என்ன உறவு முறை என்றால் எனக்கு பழக்கமானவர் ஆவார். இறந்து போன ராம்குமார் அ.சா.1இன் அண்ணன் மகன் என்றால் சரிதான். ராசுக்கோனார் எனக்கு உறவினரா என்றால் இல்லை, அ.சா.-1 இன் நண்பர் ஆவார் . கந்தர்வக்கோட்டையில் இருந்து வேலாடிப்பட்டி செல்லும்சாலை குறிப்பிட்ட தூரத்திற்கு மேற்கில் இருந்து கிழக்கில் செல்லும் சாலை என்றால் சரிதான். அந்த குறிப்பிட்ட தூரத்திற்குள் வடக்கு நோக்கி செல்லும் சாலை தான் நெப்புகை செல்லும் சாலை என்றால் சரிதான். அன்றைய தினம் நெப்புகையில் கிடாவெட்டு திருவிழா நடைபெற்றது என்றால் சரிதான். வேலாடிப்பட்டியில் மதுபானக்கடை உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அன்றைய தினம் சுற்றியுள்ள கிராமத்தினை சேர்ந்த சுமார் 1000 -க்கு மேற்பட்ட நபர்கள் அங்கு குழுமியிருந்தார்கள் என்றால் சரிதான்.

2) நானும் அ.சா.-1 ம் ராம்குமார் விபத்தில் அடிபட்டதாக கேள்விப்பட்டு சென்று பார்த்தோம் என்றால் கேள்விப்படவில்லை, விபத்தை நாங்கள் பார்த்தோம். எதிரி ஓட்டி வந்த இருசக்கரவாகனத்தின் டீசல் டாங்க் நொறுங்கியிருந்தது என்றால் சரிதான். முன்பக்க ஹேண்ட்பார் நன்றாக இருந்தது என்றால் சரிதான். ராம்குமார் வேலாடிப்பட்டியில் இருந்து வந்து, நெப்புகை செல்வதற்காக சாலையில் திரும்பிய போது, எதிரியின் வாகனத்தில் மோதி, விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவரது அண்ணன் மகன் ராம்குமார் இறந்து போனதற்கு இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காக போலிசார் தயார் செய்த குற்ற இறுதி அறிக்கைக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் சம்பவ இடத்தில்

இல்லை என்றாலும் எதிரிக்கும் வழக்கு விபத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.02.24 15:28:45 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO- 25/2020</u>**

**Dated :24.02.2026**

**Deposition of witness for : P.W.4**

**List of Witness LW7 Examined as PW4 (Mahazar Witness)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளங்கோவன் | வயது | : | 35 |
| தந்தை பெயர் | : | பொன்னுச்சாமி | தாலுகா | : | கந்தர்வகோட்டை |
| கிராமம் | : | வேலாடிப்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**

**Aadhar Card of the Witness verified.**

(எதிரி ஆஜர்)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 23.05.2019 ஆம் தேதி, மதியம் சுமார் 12.30 மணியளவில் நானும் முத்துக்குமார் என்பவரும் இருசக்கர வாகனத்தில் கந்தர்வக்கோட்டைக்கு வந்து கொண்டிருந்தோம். அப்போது, நெப்புகை சறுக்கை அருகில், போலிசார் அங்கு முன்தினம் நடைபெற்ற விபத்து சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு, வரைபடம் வரைந்தார்கள். பார்வை மகஜரில் நானும் முத்துக்குமாரும் கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சிக்கையொப்பம் என்னுடையது தான். மேற்படி பார்வை மகஜர் அ**.**சா**.**ஆ**.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1)** வரைபடம் வரைந்ததாக சொல்லும் நேரத்தில், விபத்தில் சம்மந்தப்பட்டதாக சொல்லப்படும் இருசக்கர வாகனங்கள் அந்த இடத்தில் இல்லை என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனக்கு தெரியும். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**